**ஒதுக்கீட்டுத் தலைப்பு 278 - மாவட்ட செயலகம், இரத்தினபுரி**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

## 1.1 மவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்

(அ) அரசாங்கத்தின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்

(ஆ) கிராமிய மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் உத்தியோகத்தர்கள் மற்றும் அமைப்புக்களினூடாக சட்டத்தினால் ஒப்படைக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.

(இ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் பிரதிநிதியாகச் செயற்படல்.

(ஈ) பல்வேறு தலைப்புகளுக்கான வருமானங்களைச் சேகரித்தல்.

(உ) பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.

(ஊ) மாகாணசபைகளுக்கு அவற்றின் நடவடிக்கைகளின் போது உதவிபுரிதல்.

## 1.2 மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

(அ) அயகம
(ஆ) எலபாத
(இ) எஹலியகொட
(ஈ) எம்பிலிபிடிய
(உ) இம்புல்பே
(ஊ) ஓபநாயக்க
(எ) கலவான
(ஏ) கஹவத்த
(ஐ) கிரிஎல்ல
(ஒ) குருவிட்ட
(ஓ) கொலன்ன
(ஔ) கொடகவெல
(க) நிவிதிகல
(கா) பெல்மடுல்ல
(கி) பலாங்கொட
(கீ) இரத்தினபுரி
(கு) வெலிகபொல

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்ள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 ஏப்ரல் 19 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டிணைத் திட்டமிடல், அமுல்ப்படுத்துதல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) இலிருந்து (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.6 இலிருந்து 1.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

**(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபத்தின் 2.3.2 ஆம் பந்தியின் பிரகாரம் 27801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள் 2013 மார்ச் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது 2013 ஏப்ரல் 22 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(i) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

மீளாய்வாண்டில் மாவட்ட செயலகத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 684,103,584 ஆக இருந்ததுடன் ஆண்டின் இறுதியளவில் அதில் ரூபா 650,319,128 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய சேமிப்பு ரூபா 33,784,456 ஆக இருந்ததுடன் அது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 4.9 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டுவருபவை | 419,000,000 | 618,303,584 | 3,093,755 | 0.5 |
| மூலதனம் | 65,800,000 | 65,800,000 | 30,690,701 | 46.6 |
| மொத்தம் | 484,800,000 | 684,103,584 | 33,784,456 | 4.9 |

**(ii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 21 அமைச்சுக்களிடமிருந்தும் 13 திணைக்களங்களிடமிருந்தும் முறையே ரூபா 2,501,440,901 மற்றும் ரூபா 1,050,008,217 ஆக ரூபா 3,551,449,118 தொகையான நிதி ஏற்பாடு மாவட்ட செயலகத்திற்கு கிடைத்திருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில்

முறையே ரூபா 2,492,896,304 மற்றும் ரூபா 1,020,051,403 ஆக ரூபா 3,512,947,707 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, ரூபா 38,501,411 தொகை அல்லது கிடைத்த நிதி ஏற்பாட்டில் 1 சதவீதமான சேமிப்பு வெளிப்படுத்தப்பட்டது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 2,381,720,243 தொகையான நிதி ஏற்பாட்டினை ரூபா 1,380 ஆல் மிகைத்து ரூபா 2,381,721,623 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. பொதுத் திறைசேரியின் கட்டுநிதி கிடைக்காமையின் காரணமாக மேற்கூறிய நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததாக இரத்தினபுரி மாவட்ட செயலாளர் 2013 மே 13 ஆந் திகதி எனக்குத் தெரிவித்திருந்தார்.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட எல்லைகள்**

27801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதியும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடி யானவை | இழிவு எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 50,000,000 | 49,112,713 | 30,000,000 | 44,350,411 | 185,000,000 | 145,686,909 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

27801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 1,648,279 கூட்டு மொத்தமாக இருந்தது.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் பொது வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 215,929,636 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அம்மீதிகளில் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 2,922,739 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 1.6.1 கூட்டிணைந்த திட்டம்

அனைத்து அமைச்சு செயலாளர்கள், மாகாண சபை பிரதான செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், மாகாண உள்ளூராட்சி தலைவர்கள் ஆகியோருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து எதிர்காலத்தில் ஆகக் குறைந்தது 3 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் மாவட்ட செயலகத்தினால் வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேலே 1.6.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மாவட்ட செயலகத்தினால் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 மே 23 ஆந் திகதி வரையும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

**வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்தக்கள்**

கஹவத்த பிரதேச செயலகத்தினால் இலங்கை டெலிகொம் நிறுவனத்திற்கு கோபுரம் நிர்மாணிப்பதற்காக காணித்துண்டு வழங்கப்பட்டு 12 ஆண்டுகள் கடந்திருந்தும் அக்காணித்துண்டு மதிப்பீடு செய்யப்பட்டு நீண்ட கால குத்தகைக்கு வழங்கி குத்தகைப் பணத்தினை அறவீடு செய்வதற்கு 2012 பெப்ரவரி 15 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.8 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

பிரதேச செயலகம் தொடர்பாக இடம்பெற்ற கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | |
| நி.பி 139(1) மற்றும் நி.பி 257 | 10,369,526 | 04 பிரதேச செயலகங்களினால் 232 கொடுப்பனவு உறுதிச்சான்றுகளின் கொடுப்பனவுகள் சான்றுபடுத்தப்பட்டிருக்க வில்லை. |
| நி.பி 137 | 876,474 | இம்புல்பே பிரதேச செயலகத்தினால் ரூபா 876,474 தொகையான கொடுப்பனவுகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி 237 | 290,000 | இம்புல்பே பிரதேச செயலகத்தினால் விசேட சான்றிதழ் ஒன்று பெற்றுக்கொள்ளாது ஒரு ஒப்பந்தக்காரருக்கு ரூபா 290,000 செலுத்தப்பட்டிருந்தது. |

## 1.9 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதிலுள்ள பலவீனங்கள்

பிரதேச செயலகங்களினால் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

### (அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல்

எம்பிலிபிட்டி பிரதேச செயலகத்தினால் துங்கம எபிடகொட மத்திய வீதிக்கு கல் பரப்பி தார் இடுவதற்காக ரூபா 341,237 பெறுமதி கொண்ட உடன்படிக்கை 2012 ஆகஸ்ட் 05

ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் அதிக மழை காரணமாக வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயற்திட்டத்தினை ஆரம்பிக்காது கைவிடுதல்**

பிரதேச செயலகத்தினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அச்செயற்திட்டங்கள் பூர்த்திசெய்யப்படாது கைவிடப்பட்டிருந்தன.

| | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவு | கைவிடப்பட்டமைக்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | ரூபா | |
| (i) | நிவிதிகல பிரதேச செயலகப் பிரிவின் பனஹெடகல காலடிப் பாலம் நிர்மாணித்தல் (பொருள் உதவி) | 480,000 | 2011/09/25 | 155,922 | உடன்படிக்கை செய்யப்பட்ட காலத்திற்குள் வேலையினைப் பூர்த்தி செய்வதற்கு அமைப்பிற்கு முடியாமை, மற்றுமொரு அமைப்பிற்கு வழங்குவதற்கு காலம் போதியதாக இல்லாமை, எதிர்பார்க்கப்பட்ட சமூகப் பங்களிப்பு இல்லாமை என்பனவாகும். |
| (ii) | ஓபநாயக்க பிரதேச செயலகப் பிரிவில் உடவெல பிங்கிரிஹாமிகொட வீதியினை அபிவிருத்தி செய்தல் | 1,000,000 | 2012/06/08 | 218,310 | செயற்திட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் நியமங்களைப் பரீட்சித்த போது செயற்திட்டம் உரிய நியமங்களுக்கு அப்பாற்பட்டிருந்தது. |

**(இ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

பிரதேச செயலகங்களினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூர்த்திசெய்யப்பட வேண்டிய திகதி | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவு | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | ரூபா | |
| | **எஹலியகொட** | | | | | |
| (i) | ப/கலடுவாவ பல்நோக்கு கட்டிட நிர்மாணம் | 1,226,263 | 2012/11/30 | 2012/12/31 | இல்லை | ஒரு சங்கம் உடன்படிக்கை செய்வதற்குத் தாமதித்தமை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ii) | தொரணகொட பாளுகெதரவத்த குடிநீர் செயற்திட்டம் | 980,000 | 2012/10/05 | 2012/12/15 | இல்லை | செயற்திட்டத்தில் திருத்தம் செய்தல் மற்றும் சீரற்ற காலநிலை |
| | **எம்பிலிபிட்டிய** | | | | | |
| (iii) | தோரகொலயாய சிங்கிதி உயன முன்பள்ளி கட்டிட நிர்மாணம் | 380,450 | 2012/08/15 | 2012/12/15 | இல்லை | இடத்தை மாற்றுதல் |
| | **நிவிதிகல** | | | | | |
| (iv) | வடாபொத சுதர்சன அறநெறிப் பாடசாலை உபகரணங்கள் வழங்கல் | 50,000 | 2012/10/09 | 2012/12/31 | இல்லை | கொள்வனவு செய்வதில் தாமதம் |
| (v) | துத்திரிபிடிய சமகி மாவத்தை அபிவிருத்தி செய்தல் | 100,000 | 2012/05/30 | 2012/12/31 | 195,000 | தொடரப்பட்டது |
| (vi) | நவங்கொட பாலம் நிர்மாணித்தல் | 4,000,000 | 2011/07/01 | 2012/12/31 | 3,189,356 | தொடரப்பட்டது |
| (vii) | பஹலகந்த விளையாட்டு மைதானத்தை தயார்படுத்தல் | 75,000 | 2012/11/21 | 2012/12/31 | இல்லை | தொடரப்பட்டது |
| (viii) | வத்தஹேன சிறீ சுதர்சனாராம பலநோக்கு கட்டிடத்தை நிர்மாணித்தல் | 100,000 | 2012/10/02 | 2012/12/31 | இல்லை | தொடரப்பட்டது |
| (ix) | சுதர்சனராம பலநோக்கு கட்டிடத்தின் கூரையை தயார்படுத்தல் | 100,000 | 2012/10/02 | 2012/12/31 | இல்லை | தொடரப்பட்டது |
| (x) | பொல்கஹவத்த தொலஸ்வலவத்த வீதியினை வெட்டி தயார்படுத்தல் | 100,000 | 2012/10/02 | 2012/12/31 | இல்லை | தொடரப்பட்டது |
| (xi) | தேல நவங்கட | 150,000 | 2012/12/08 | 2012/12/31 | இல்லை | தொடரப்பட்டது |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | வீதியில் மதகினை நிர்மாணித்தல் | | | | | |
| (xii) | வதுபிடிய ஹொரங்கல வீதிக்கு கொங்கிறீட் இடல் | 100,000 | 2012/12/17 | 2012/12/31 | இல்லை | தொடரப்பட்டது |
| (xiii) | கரவிட பிங்கந்த ஊடாக மேல் பகுதி வீதிக்கு கொங்கிறீட் இடல் | 150,00 | 2012/12/19 | 2012/12/31 | இல்லை | தொடரப்பட்டது |

**(ஈ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் பலவீனம்**

**(i) கலவான**

நாரகல்பிடிய ஊடாக விஸ்கம்கொட வீதிக்கு கொங்கிறீட் இடும் செயற்திட்டத்தில் வேலை விடயம் இலக்கம் 03 இற்கு கொடுப்பனவு செய்யும் போது உரிய நியமங்களின்றி இலகுவில் களன்றுவிடும் தன்மை கொண்ட 71.2 மீற்றர் நீளமான வீதிப் பகுதிக்கு கொங்கிறீட் இடுவதற்காக மதிப்பிடப்பட்ட விலை விகிதங்களின் பிரகாரம் எதுவித குறைப்பும் செய்யப்படாது ரூபா 269,093 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**(ii) கிரிஎல்ல**

ரூபா 977,549 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட 806 அடி மொத்த நீளமான முதுன்கொடுவ மாரதாவக வீதி ஏற்றுக்கொள்ளப்பட்ட தரத்தில் இல்லாமல் கொங்கிறீட் கலவை பயன்படுத்தப்பட்டு கொங்கிறீட் இடப்பட்டதன் காரணமாக முழு வீதியினதும் கொங்கிறீட் இலகுவாக களன்று போயிருந்ததுடன் வீதியின் நிர்மாண நடவடிக்கை பூர்த்தியடைந்து 6 மாதங்கள் கடப்பதற்கு முன்னர் வீதியின் மேற்பரப்பு நிரந்தரமாக அகற்றப்பட்டு கற்கள் உருவாகி வீதி உடைந்திருந்தமை ஆபத்துக்குள்ளாகியிருந்தது.

**(iii) பெல்மடுல்ல**

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் 04 மின்சார செயற்திட்டங்களுக்காக மின்சார சபைக்கு ரூபா 467,400 பணம் செலுத்தப்பட்டிருந்தும் அச்செயற்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டு மக்களிடம் ஒப்படைப்பதற்கு 2012 யூலை 20 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இச்செயற்திட்டம் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை இடம்பெற்றிருக்காததுடன்

செயற்திட்டம் பூர்த்தியடையாதிருந்தும் வேலை பூர்த்தியடைந்ததாக செயல்முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

**(iv) எம்பிலிபிட்டிய**

குட்டிகல தொழிற்சாலைக்கு அருகாமையில் கரவிலயாய வீதியினை கச்சிகல வரை கொங்கிறீட் இடும் செயற்திட்டத்தின் வீதியில் 31 மீற்றர் நீளமான பகுதிக்கு கொங்கிறீட் இடுதல் உரிய நியமத்தின் படி இடம்பெற்றிருக்காததுடன் அப்பகுதி முழுவதும் வெடித்திருந்தது. வீதியின் அப்பகுதிக்கு 9.3 சதுர மீற்றருக்கு கொங்கிறீட் இடுவதற்காக ரூபா 98,482 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**(v) நிவிதிகல**

- பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தினை திருத்தம் செய்யும் வேலையின் மதிப்பீட்டிற்குரிய 10 வேலை விடயங்களுக்காக ரூபா 339,368 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அவ்வேலைப் பகுதி சிறப்பாக இல்லாமை, நியமத்திற்கு இணங்கி இருக்காமை, முறைப்படியாக நிறைவேற்றியிருக்காமை, பழைய துணைப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டமை ஆகிய குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- கிரிகத்கல வித்தியாலயத்தில் மலசலகூடம் நிர்மாணிப்பது தொடர்பான 02 வேலைப் பகுதிகளுக்காக ரூபா 65,150 கூட்டுமொத்த தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த இரண்டு வேலைப் பகுதிகளில் கதவுகளையும் நிலைகளையும் தயாரிக்கும் போது பித்தளைப் பொருட்களுக்காக இரும்பு பொருட்கள் பொருத்தப்பட்டிருந்ததுடன் முதலாம் வகுப்பு மரத்திற்குப் பதிலாக கூரையினைத் தயார் செய்யும் போது பழுதுகளுடனான தீக்குச்சி மரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(உ) விளைவற்ற செலவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| அலுவலகம் | செயற்திட்டம் | செலவு | அவதானிப்பு |
|---|---|---|---|
| எம்பிலிபிடிய | ஹிங்குர போகல் ஆர நீர்த்திட்டத்தின் நீர்த்தாங்கியினை நிர்மாணித்தல் | 267,655 | பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. |
| கொலன்ன | அலுவலகத்தின் உள்ளக மலசலகூட முறைமையினை திருத்தம் செய்தல் | 106,147 | மலசலகூட முறைமை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. |

**(ஊ) பிழையான அளவீட்டின் அடிப்படையில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்**

பின்வரும் 04 செயற்திட்டங்களுக்காக பிழையான அளவீட்டின் அடிப்படையில் ரூபா 639,437 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

| அலுவலகம் | செயற்திட்டம் | வேலை விடயங்களின் எண்ணிக்கை | மேலதிகமாகச் செலுத்திய தொகை ரூபா |
|---|---|---|---|
| நிவிதிகல | மஹானாம வித்தியாலயத்தில் மலசலகூடம் நிர்மாணித்தல் | 01 | 14,809 |
| | எரபத்த வித்தியாலயத்தில் நுழைவு வீதிக்கு கொங்கிறீட் இடல் | 03 | 28,574 |
| | பொல்வத்த வயல்வெளிக்கு பக்கச்சுவர் நிர்மாணித்தல் | 05 | 362,262 |
| எம்பிலிபிடிய | கோன்கடுவ குளத்தின் பிரதான இரண்டு கால்வாய்களை திருத்தம் செய்தல் | 01 | 113,600 |
| கிரிஎல்ல | தெஹரகொட பன்முல்ல அமுன கால்வாய்க்கு கொங்கிறீட் இடம் | 01 | 82,536 |
| இரத்தினபுரி | சில்வர்லேன்ட் எவன்டலுக்கு முன்னால் உள்ள வீதிக்கு கொங்கிறீட் இடல் | 01 | 37,656 |
| | | | 639,437 |

**(vi) நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக கொடுப்பனவு செய்தல்**

03 பிரதேச செயலகங்களின் 03 செயற்திட்டங்கள் தொடர்பான 09 வேலை விடயங்கள் நிறைவேற்றப்படாதிருந்தும் அதற்காக ரூபா 324,765 செலுத்தப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| அலுவலகம் | செயற்திட்டம் | நிறைவேற்றப்படாத வேலைகளின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|---|
| அயகம | இர/அயகம ஜனபதி வித்தியாலயத்திற்கு மலசலகூட வசதிகள் வழங்குதல் | 01 | 3,931 |
| இம்புல்பே | பம்பஹின்ன கரப்பந்தாட்ட விளையாட்டு மைதானத்திற்கு வெளியே வலையால் மறைப்புக்கள் செய்து மின்சார விளக்குகள் பொருத்துதல் | 06 | 58,450 |
| எம்பிலிபிட்டிய | குட்டிகல தொழிற்சாலைக்கு அருகாமையிலுள்ள கரவிலயாய வீதிக்கு கச்சிகல வரையும் கொங்கிறீட் இடல் | 01 | 38,644 |
| | கொன்கட்டுவ குளத்தின் இரண்டு கால்வாய்களை திருத்தம் செய்தல் | 01 | 223,740 |
| | | | 324,765 |

## 1.10 வங்கி கணக்குச் செயற்பாடுகளிலுள்ள குறைபாடுகள்

**செம்மையாக்க வேண்டிய மீதி**

பிரதேச செயலகத்தினால் 2012 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்ட செம்மையாக்கல் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | செம்மையாக்கல் தொடர்பான விபரம் | காலப்பகுப்பாய்வு<br>6 மாதங்களுக்கு மேல்<br>1 ஆண்டிற்கு குறைய |
|---|---|---|
| | | ரூபா |
| (i) | வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 4,000 |
| (ii) | இனங்காணப்படாத செலவுவைத்தல்கள் | 432,620 |

## 1.11 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

கொலன்ன பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கேல்ல மற்றும் அம்பகஹயாய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் அரசாங்கத்திற்குச் சொந்தமான 02 காணித்துண்டுகளில் 2 தொலைபேசித் தொடர்பாடல் கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டு தொலைத்தொடர்பு நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அவ்வாறான கோபுரத்தை அரசாங்க காணியில் நிர்மாணிக்கும் போது பிரதேச செயலகத்தினால் செய்யப்படவேண்டிய ஆரம்ப நடவடிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மாகாண காணி ஆணையாளரின் முன் அங்கீகாரமின்றி இத்தொலைபேசி கோபுரத்தினை நிர்மாணிக்கும் நடவடிக்கையினை ஆரம்பிப்பதற்கு பிரதேச செயலாளரினால் உரிய கம்பனிக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது, அரசாங்க ஆதனத்தினை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் உரிய முறையில் அமுல்படுத்தப்படாததன் காரணமாக அரசாங்கத்திற்கு எதுவித நலனும் கிடைக்காது அரசாங்கத்தின் ஆதனம் 02 தனியார் தொலைபேசிக் கம்பனிகளால் சட்டரீதியற்ற வகையில் பயன்படுத்தப்பட்டமை கண்டறியப்பட்டது.

## 1.12 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாவட்ட செயலகத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகள் அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவினால் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் தொடர் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்படாது காணப்பட்ட பந்திகள் கீழே தரப்படுகின்றன.

| **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு** | | **தொடர்புபட்ட விடயம்** |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2007 | 5.6.4 | வெளிப்படையான ஒழுங்கீனம் |

(ஆ) தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

**(i) மாவட்ட செயலகம்**

பீ.06 ஆம் இலக்க உத்தியோகபூர்வ இல்லத்தில் வசிக்கும் இரத்தினபுரி பிரதேச செயலாளரிடமிருந்து 2012 யூலை 22 ஆந் திகதி முதல் 2013 சனவரி 31 ஆந் திகதி வரையான காலம் தொடர்பாக ஆரம்பச் சம்பளத்திலிருந்து 10% ஆக ரூபா 114,180 கூட்டுமொத்த தொகையான உத்தியோகபூர்வ இல்ல வாடகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ii) இம்புல்பே பிரதேச செயலகம்**

01 ஆம் இலக்க மற்றும் 02 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் இல்லங்களில் இரண்டு கிராம உத்தியோகத்தர்கள் முறையே 2005 சனவரி மாதத்திலிருந்தும் 2012 யூன் மாதத்திலிருந்தும் வாழ்ந்து வருகின்ற போதிலும் அதற்காக எதுவித தொகையையும் வீட்டு வாடகையாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.13 மனித வளங்கள் முகாமைத்துவம்

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவயணியினரும் உள்ளபடியான பதவயணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | **பதவியினர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை** | **உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | **மிகைகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 57 | 50 | 07 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | மூன்றாம் நிலை | 40 | 26 | 14 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,067 | 867 | 200 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 169 | 173 | - | 04 |
| (v) | ஏனையவை (அமையம்/ தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) | - | 02 | - | 02 |
| | | ------------ | --------------- | -------------- | -------- |
| | மொத்தம் | 1,333 | 1,118 | 221 | 06 |
| | | ===== | ====== | ===== | ==== |